**சைவ சமய அறிவு**
**பாலர் பிரிவு (5 வயது முதல் 7 வயது வரை)**
**மாதிரிக்கேள்விகள்**

1 உங்கள் சமயம் எது?
சைவ சமயம்

2 சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் யார்?
சிவபெருமான்

3 பூசைக்குத் தேவையான பொருள்கள் 5 கூறவும்.
பூக்கள், பழங்கள், தேங்காய், கர்ப்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, இளநீர்

4 நாம் உணவை உண்பதற்கு முன்னர் என்ன செய்யவேண்டும்?
இறைவனை நினைந்து நன்றி செலுத்தி வணங்கவேண்டும்.

5 நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது?
கோயில்

6 கோயிலுக்கு வேறொரு பெயர் கூறுக?
ஆலயம்.

7 கோயில் வாசலில் நீர் காண்பது என்ன?
கோயில் கோபுரம்

8 தேர்த்திருவிழா ஒரு ஆண்டில் எத்தனை முறை நடைபெறும்?
ஒரு முறை

9 நாம் கோயில் சென்று கடவுளை வணங்குவதற்கு முன்பு யாரைத் தினமும் வீட்டில் வணங்கவேண்டும். ?
தாய், தந்தையரை வணங்கவேண்டும்.

10 திருநீற்றை நிலத்தில் (தரையில்) போடலாமா?
திருநிற்றைத் தரையில் போடக்கூடாது.

11 திருநீற்றின் நிறம் என்ன?
திருநீற்றின் நிறம் வெள்ளை

13 பிள்ளையாரை எப்படி வணங்குகிறோம்?
நெற்றியில் 3 முறை குட்டி, தோப்புக்கரணம் போட்டு வணங்குவோம்.

14 நாம் ஏன் போகிறோம்?
கடவுளை வணங்குவதற்குப் போகிறோம்.

15 கோயில் உள்ளே நீங்கள் பார்க்கும் இரண்டு பொருள்களின் பெயர்களைக் கூறுக?
பூக்கள், பழங்கள், தேங்காய், திருநீறு (விபூதி), சந்தனம், குங்குமம்.

16 கோயிலில் கடவுளை எப்படிக் கும்பிடவேண்டும்?
மனதில் இறைவனை நினைத்தபடி இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிடவேண்டும்.

17 கோயிலில் பூசை முடிந்ததும் என்ன கொடுப்பார்கள்?
திருநீறு, தீர்த்தம், சந்தனம், குங்குமம், பிரசாதம்

18 திருநீறு - இதற்கு வேறு பெயர் ஒன்று கூறுக?
விபூதி

19 பிள்ளையாருக்கு எந்தப் புல்லினால் அருச்சனை செய்வார்கள்?
அறுகம் புல்லினால் அருச்சனை செய்வார்கள்.

20 பிள்ளையாருக்குச் சாத்துவதற்கு உகந்த புல் எது?
அறுகம் புல்

21 உலகத்தைப் படைத்தவர் யார்?
கடவுள்

22 கடவுளுக்கு இன்னுமொரு பெயர் கூறுக?
இறைவன்

23 எப்படிப் பூசுவீர்?
சிவ சிவ என்று உச்சரித்துக் கடவுளை வணங்கியபடி திருநீற்றைப் பூசவேண்டும்.

25 திருநீற்றை எங்கே பூசவேண்டும்?
திருநீற்றை நெற்றியிலே பூசவேண்டும்.

26 சிவப்புத் தாமரைப் பூவில் இருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக?
இலக்குமி அம்மன்

27 சந்தனத்தின் நிறம் என்ன?
மஞ்சள் நிறம்

28 குங்குமத்தின் நிறம் என்ன?
சிவப்பு நிறம்.

29 வேலைக் கையில் வைத்திருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக.
முருகப்பெருமான் - வேலாயுதன் - மயில்வாகனன்

30 மோதகத்தைக் கையில் வைத்திருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக
பிள்ளையார் – கணபதி – ஐங்கரன் -

31 புலித்தோலை அணிந்த கடவுளின்; பெயரைக் கூறுக.
சிவபெருமான்

32 கல்விச் செல்வத்தைத் தரும் தெய்வத்தின் பெயரைக் கூறுக.
சரசுவதி தேவி (சரஸ்வதி தேவி)

33 வெள்ளைத் தாமரைப் பூவில் இருக்கும் கடவுளின் பெயரைக் கூறுக.
சரசுவதி தேவி (சரஸ்வதி தேவி)

34 பிள்ளையாரின் தம்பி என்று எந்தக் கடவுளைக் கூறுவர்.
முருகப் பெருமான்

35 முருகப்பெருமானின் கையில் என்ன ஆயுதம் உள்ளது?
வேலாயுதம் - வேல் - உள்ளது.

36 முருகப் பெருமானின் அண்ணனின் பெயரைக் கூறுக.
பிள்ளையார்

37 கோயிலில் நடைபெறும் ஒரு திருவிழாவின் பெயரைக் கூறுக.
(உ-ம்) தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா...

39 கோயிலுக்கு உள்ளே சென்றதும் முதலில் எந்தக் கடவுளை கும்பிடவேண்டும்?
முதலில் பிள்ளையாரைக் கும்பிட வேண்டும்.

40 எந்தக் கடவுளுக்கு முதலில் பூசை செய்யவார்கள்?
பிள்ளையாருக்கு முதலில் பூசை செய்யவார்கள்.

41 எந்தக் கடவுளுக்குக் கடைசியாக பூசை செய்யவார்கள்?
சண்டேசுவர (சண்டேஸ்வர) சுவாமிக்கு கடைசியாகப் பூசை செய்யவார்கள்.

42 பிள்ளையாரின் வாகனம் எது?
எலி வாகனம்

43 பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும்.
கணபதி, விநாயகர், ஐங்கரன், ஆனைமுகன், ஏகதந்தன், கரிமுகன், ஆகீசன், மதகரி, ஆகுவாகனன், மதங்கன்

44 யானை முகத்தைக் கொண்ட கடவுளை எப்படி அழைப்பீர்கள்?
ஆனைமுகன், கரிமுகன், பிள்ளையார்

45 முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது?
சேவல்

46 முருகப் பெருமானுக்கு வேறு பெயர்கள் கூறுக.
ஆறுமுகன், சேந்தன், சரவணபவன், கார்த்திகேயன், சுப்பிரமணியன், மயில்வாகனன், கந்தன், செவ்வேள், வடிவேலன், கடம்பன், அயிலவன், வேலாயுதன்

47 கோயிலுக்கு எப்படி நாம் செல்ல வேண்டும்?
குளித்துத் தூய ஆடை அணிந்து செல்லவேண்டும்.

48 பெரியவர்கள் அல்லது குருக்கள் திருநீறு தரும்பொழுது எப்படி வாங்குவீர்கள்?
பெரியவர்களை வணங்கி இடக்கைமேல் வலக் கையை வைத்து பயபக்தியுடன் வலக்கையால் வாங்கவேண்டும்.

49 கோயிலுக்குள் சென்றபின் நீங்கள் எப்படி இருப்பீர்கள்? நடந்துகொள்வீர்?
அமைதியாகவும் சத்தம் செய்யாமலும் இருக்க வேண்டும்.